## புலியகுளம்,அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,கோயம்புத்தூர்-45

## முதல்வர் அவர்களின் செயல்முறைகள்

**முன்னிலை** : முனைவர்.வெ.முரளிதரன், முதல்வர்

**ந.க.எண்** : 424 /பி/2021 **நாள்:** 10.12.2021

**பொருள்:** கல்லூரிக் கல்வித்துறை-தமிழ்நாடு அமைச்சுப்பணி- திருமதி.ஆ.நீனாதேவி-இளநிலை உதவியாளர்-2017-18-கீழ்நிலைப்பதவியில் இருக்கும் தகுதியுள்ள பணியாளர்களுக்கு பணிமாறுதல்மூலம் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு பணியமர்த்தப்பட்டமை-பணிவரன் முறை செய்து ஆணையிடுதல்-தொடர்பாக.

**பார்வை:**

1. சென்னை-6, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்:10891/பி1/2017 நாள்: 30.05.2018
2. 04.06.2018 நாளிட்ட அன்னாரின் கடிதம்.
3. சென்னை-6, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்:4000/பி1/2017 நாள்: 26.10.2021

----

உதகமண்டலம் அரசு கலைக் கல்லூரியில் பதிவறை எழுத்தராக பணியாற்றி வந்த திருமதி.ஆ.நீனாதேவி என்பாருக்கு பார்வை(1)-ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி கீழ்நிலைப்பதவியில் இருக்கும் தகுதியுள்ள பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளராக தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொதுவிதி 36Aன்படி பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டதையடுத்து பார்வை (2)-ல் காணும் அன்னாரின் கடிதத்தின்படி உதகமண்டலம் அரசு கலைக் கல்லூரியில் 05.06.2018 அன்று இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார். பார்வை-(3)ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி அன்னாருக்கு இடப்பெயர்வு அளிக்கப்பட்டு இக்கல்லூரியில் 01.11.2021 முதல் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்து கொண்டார். அன்னார் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து மூன்று ஆண்டுகாலம் நிறைவுற்ற நிலையில் அன்னாரின் பணி வரன் முறை செய்யப்படாமல் உள்ளது. எனவே, திருமதி.ஆ.நீனாதேவி என்பார் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 05.06.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

10.12.21

முதல்வர்

10.12.21

<u>பெறுநர்:</u>

1. திருமதி.ஆ.நீனாதேவி
   இளநிலை உதவியாளர்

<u>நகல்:</u>

1. கல்லூரிக் கல்வி இயக்குநர் ,சென்னை-600 006.
   (தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது)
2. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் , கோயம்புத்தூர் மண்டலம்.
   (தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது)